இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 74 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 06 – புதன்கிழமை 23 அக்டோபர் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 74 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 06 - Wednesday 23 October 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## திராவிட இயக்கப் படைப்பாளர்களுக்கும், படைப்புகளுக்கும் கழக முப்பெரும் விழாவில், விருதுகள் வழங்கிடும் வகையில்;

# முரசொலி செல்வம் பெயரில் அறக்கட்டளை!

## படத்திறப்பு – புகழஞ்சலி நிகழ்ச்சியில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு! உருக்கமிகு உரை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைத்தார். உடன், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து குழுமத்தின் இயக்குநர் என்.ராம், திரைப்பட நடிகர் சத்யராஜ், பேராசிரியர் மு.நாகநாதன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் நிருவாகிகள் கலந்து கொண்டனர்.



**சென்னை, அக்.23–**

**சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் (21.10.2024) மாலை நடைபெற்ற முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு – புகழஞ்சலி நிகழ்ச்சியில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "முரசொலி செல்வம் அவர்கள் பெயரில் புதிதாக அறக்கட்டளை துவக்கப்பட்டு, திராவிட இயக்கப் படைப்பாளர்களுக்கும், படைப்புகளுக்கும் கழக முப்பெரும் விழாவில் ஆண்டுதோறும் 'முரசொலி செல்வம்' அறக்கட்டளை விருதுகள் வழங்கப்படும்" என உருக்கமுடன் குறிப்பிட்டார்.**

சென்னை, அண்ணா அறிவாலயம் - 'கலைஞர் அரங்கில்' நேற்று முன்தினம் (21-10-2024) மாலை, நடைபெற்ற முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு - புகழஞ்சலி நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

மறைந்த நம்முடைய மதிப்பிற்குரிய முரசொலி செல்வம் அவர்களுடைய திருவுருவப் படத்தினைத் திறந்து வைக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி இன்று நடந்து கொண்டிருக்கிறது. இந்த மைக்குக்கு முன்னால் நின்று பேசலாமா அல்லது தவிர்த்துவிடலாமா என்கிற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ஒரு மனக்குழப்பத்திலே நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன்.

### முரசொலி செல்வம் மறைவு - எங்களால் ஏற்க முடியவில்லை!

முரசொலி செல்வம் அவர்கள் மறைந்துவிட்டார் என்பதை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை; ஏன் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. பேசுவதால் அவர் திரும்பி வந்து விடப் போகிறாரா? என்ற அந்த ஏக்கமும் என்னுடைய நெஞ்சத்தை, என்னுடைய தொண்டையை அடைத்துக் கொண்டிருக்கிறது.

கடந்த 10–ஆம் தேதி அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தியை தம்பி தயாநிதி அவர்கள்தான் முதன்முதலில் எனக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு காலை 10 மணியளவில் என்னிடத்தில் சொன்னார். அதிர்ந்துவிட்டேன். நம்ப முடியவில்லை. அவருக்கு எந்த உடல்நலக் குறைவும் கிடையாது. ஏதேனும் உடல் கோளாறு ஏற்பட்டு அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாரா என்றால் இல்லை. எனவே, அப்படிப்பட்டவர் மறைந்துவிட்டார் என்று சொல்கிறபோது என்னால் மட்டுமல்ல, என்னுடைய குடும்பத்தைச் சார்ந்திருக்கக்கூடிய அனைவரும் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில்தான் அவர்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர் மறைவதற்கு முதல் நாள் மாலை என்னுடைய தங்கை செல்வியிடத்தில் பேசியிருக்கிறார். கலாநிதி மாறனிடத்தில் பேசியிருக்கிறார். அவருடைய மகள் எழிலரசியிடம் பேசியிருக்கிறார். என்னுடைய தம்பி தமிழரசுவுடன் பேசியிருக்கிறார். ஏன் என்னிடத்திலும் பேசினார். "நாளை நான் சென்னைக்குப் புறப்பட்டு வருகிறேன்" என்று சொன்னார்; வந்தார். உயிருடன் வரவில்லை. உடல் மட்டும்தான் வந்தது. நம்மையெல்லாம் ஒரு சோகச் சூழ்நிலையில் அவர் தவிக்க விட்டுவிட்டுப் போய்விட்டார்.

### சர் ஏ.டி. பன்னீர் செல்வம் நினைவைப் போற்றி - கலைஞர் சூட்டிய பெயர்!

தலைவர் கலைஞருடைய அக்கா மகன் – அதனால்தான் இங்கே எல்லோரும் சொன்னார்கள் நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்த சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் நினைவைப் போற்றக் கூடிய வகையில் அவருக்குச் 'செல்வம்' என்று தலைவர் கலைஞர் அவர்கள்தான் பெயர் சூட்டினார். மார்ச் மாதம் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் மறைந்தார்கள். ஏப்ரல் மாதம் நம்முடைய முரசொலி செல்வம் அவர்கள் பிறந்தார். அவரது நினைவாக அவருடைய பெயர் சூட்டப்பட்டது. எப்படி அவருக்கு அவருடைய நினைவாகப் பெயர் சூட்டப்பட்டதோ, அதேபோல் எனக்குத் தங்கை பிறந்தபோது தலைவர் கலைஞர் அவர்கள் 'செல்வி' என்று பெயர் சூட்டி அப்போதே திருமணத்திற்கான முடிவை எடுத்துவிட்டார்கள்.

தலைவர் கலைஞர் அவர்களைப் பொருத்தவரையில் செல்வம் அவர்களுக்கு இரண்டாம் தாயாக, செல்வத்தை வளர்த்தவராக இருந்தார். கலைஞருடைய வார்ப்பாக செல்வம் அவர்கள் விளங்கினார்கள்.

### எங்களுக்கெல்லாம் மூத்த அண்ணனாக இருந்து வழிநடத்தியவர்!

நாங்களெல்லாம் அவரை மாமா, அத்தான் என்ற உறவுமுறைகளை அழைப்பதாக இருந்தாலும், அத்தனைபேரும் 'குட்டி அத்தான், குட்டி அத்தான்' என்றுதான் செல்லமாக அழைப்பதுண்டு. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் அது நானாக இருந்தாலும் சரி, தம்பி தமிழாக இருந்தாலும் சரி, அண்ணன் அழகிரியாக இருந்தாலும் சரி... அவரை 'அண்ணன், அண்ணன்' என்றுதான் அழைப்போம். காரணம், அவர் எங்களுக்கெல்லாம் மூத்த அண்ணனாக இருந்து அறிவுரைகளை, ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கிக்கொண்டு இருந்தார்கள்.

### முரசொலி செல்வம் மறைவால் - என் மனம் சுக்கு நூறானது!

இன்னும் சொல்லவேண்டும் என்றால், நம்முடைய தலைவர் கலைஞர் மறைவிற்குப் பிறகு நம்முடையப் பொதுச் செயலாளராக இருந்த பேராசிரியரின் மறைவிற்குப் பிறகு, நம்முடைய முரசொலி செல்வம் அவர்களின் மறைவிற்குப் பிறகு எனது மனம் உடைந்து சுக்குநூறு

தொடர்ச்சி 4– ஆம் பக்கம்

> **முரசொலி செல்வம் பெயரில் 'திராவிட இதழியல் பயிற்சிக் களம்' எனும் கல்லூரி!**
>
> **– திராவிடர் கழகத் தலைவர் – ஆசிரியர் கி.வீரமணியின் கோரிக்கை நிறைவேற்றப்படும்!**

---

## இந்து சமய அறநிலையத் துறை

# திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்தார்!

**சென்னை, அக். 23-**

**இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்.**

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2024) சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்து சமய அறநிலையத்துறை யானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

மேலும், திருக்கோயில்கள் சார்பில் கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்களை நிறுவி அறப்பணிகளை மேற்கொள்ளுதல், சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும் விழா எடுத்து சிறப்பு செய்தல், பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கும், மாற்றுத்திறனாளி இணைகளுக்கும் சீர்வரிசைகளை வழங்கி திருமணம் செய்து வைத்தல், மகா சிவராத்திரி மற்றும் நவராத்திரி பெருவிழாவினை பக்தர்கள் பங்கேற்புடன் சிறப்புற நடத்துதல் போன்ற பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, திருக்கோயில்கள் சார்பில் 500 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்திடும் வகையில் கடந்த 4.12.2022 அன்று முதலமைச்சர் அவர்கள் 25 இணைகளுக்கு தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

### 1,100 இணைகளுக்கு திருமணங்கள்!

அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் மொத்தம் 500 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 2023–2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, "பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50,000/– மதிப்பிலான சீர்வரிசைப் பொருட்களுடன் 600 இணைகளுக்கு திருமண விழா நடத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, முதற்கட்டமாக முதலமைச்சர் அவர்கள் 7.07.2023 அன்று 34 இணைகளுக்கு திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

இந்த அரசு பொறுப்பேற்றபின், 2022–2023 ஆம் நிதியாண்டில் 500 இணைகளுக்கும், 2023 – 2024 ஆம் நிதியாண்டில் 600 இணைகளுக்கும், என மொத்தம் 1,100 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

2024–2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் "பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2024) திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். சென்னை உட்பட மாநிலம் முழுவதும் மொத்தம் 379 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

இணைகளுக்கு மாங்கல்யத்துடன் சீர்வரிசைப் பொருட்களாக கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் எரிவாயு அடுப்பு, வெட் கிரைண்டர், மிக்சி, குக்கர், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திருப்பெரும்புதூர், உலகாரிய ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள், தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு சிதம்பரநாத ஞானபிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜே.எம்.எச்.அசன் மவுலானா, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ச.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.